Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 27** |
| **Name** | : | **திரு. ராஜன்பாபு** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.12.2023**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.07.2015 ம் வருடம் மதுரை மாநகர் C3 S.S. காலனி காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, சுமார் 20.00 மணிக்கு நிலையம் ஆஜராகி வழக்கில் இறந்து போன கௌரி என்பவரின் கணவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று SS காலனி காவல்நிலைய குற்ற எண். 700/2015 சட்டப் பிரிவுகள் 454, 302, 380 இதச -வில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். புகார் ஏற்கனவே அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.33 ஆகும்.** முதல் தகவல் அறிக்கையை விரைவுத் தபால் மூலம் நீதித்துறை நடுவர் எண்.5 அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும்

அனுப்பி வைத்தேன். பிறகு உடனடியாக காவல் துப்பறியும் மோப்பநாய் பிரிவு, நடமாடும் தடய அறிவியல் பிரிவு, மற்றும் புகைப்பட நிபுணர், விரல் ரேகை நிபுணர் ஆகியோருக்குத் தகவல் சொல்லிவிட்டு இவ்வழக்கில் இறந்து போன கௌரி என்பவரின் பிரேதத்தை அரசு ராஜாஜி மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்துவிட்டு சம்பவ இடத்திற்கு சுமார் 20.45 மணிக்குச் சென்றேன். பிறகு சம்பவ இடத்தைப் சாட்சிகள் வெங்கடேஷ்பாபு, சேகர் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு, 21.00 மணி முதல் 21.30 மணிவரை மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அதே சாட்சிகள் முன்னிலையில் 21.30 மணி முதல் 22.00 மணி வரை பார்வை மகஜர் தயார் செய்து அதே சாட்சிகளிடம் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன். பார்வை மகஜர் ஏற்கனவே அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **மாதிரி வரைபடம் அதசாஆ.34 ஆகும்.**

பிறகு சம்பவ இடத்தில் காணப்பட்ட தடயங்களான இரத்தம் படிந்த மொசைக் கல் ஒன்று, இரத்தம் படியாத மொசைக் கல் ஒன்று, இரத்தம் படிந்த ஷோபா இருக்கையின் துணி சிறிது, இரத்தம் படியாத ஷோபா இருக்கையின் துணி சிறிது, இரத்தம் படிந்த தலையணை ஒன்று, இரத்தம் படிந்த படுக்கை விரிப்பு ஒன்று, இரத்தம் படிந்த கைலி ஒன்று, சம்பவ இடமான வீட்டின் உட்பகுதியில் ஆங்காங்கே தூவப்பட்டிருந்த மிளகாய் பொடி சிறிது, ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து அதே சாட்சிகள் வெங்கடேஷ்பாபு, சேகர் முன்னிலையில் கைப்பற்றி அவர்கள் கையொப்பம் பெற்றேன். **மிளகாய் பொடி அசாபொ.25 ஆகும்.** அந்த அத்தாட்சி ஏற்கனவே அதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிறகு சாட்சிகளான வாதி வெங்கடேசன், வாதியின் 2வது மகள் ஸ்வந்திகா, வாதியின் அண்டை வீட்டில் குடியிருக்கும் சங்கீதா, மஞ்சுளா, மற்றும் வாதியின் நண்பர் செந்தில்குமார், மகஜர் சாட்சிகளான வெங்கடேஷ்பாபு, சேகர் ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பிறகு மறுநாள் 01.08.2015ம் தேதி கொலையுண்டு இறந்த கௌரி

என்பவரின் பிரேதம் வைக்கப்பட்டிருந்த அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று அங்கிருந்த பஞ்சாயத்தார்கள் வாஞ்சிநாதன், தங்கராஜ், மகேஸ்வரன், சுரேஷ், மற்றும் சலீம்ராஜா ஆகியோரை விசாரித்து அவர்களின் பொதுவான கருத்தினைப் பதிவு செய்து அவர்களின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தேன். பிறகு தொடர்ச்சியாக பிரேத விசாரணையின் போது உடன் இருந்த சாட்சிகள் ஆண்டவர், செல்லத்துரை, ஈஸ்வரி, நேகா, பாக்கியம், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.விஜயக்குமார், முதல்நிலை காவலர் திரு.செந்தில்குமார், ஆகியோரை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைத் தனித்தனியே பதிவு செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ.35 ஆகும்.**

பிரேத பரிசோதனைக்கு உடன் இருந்த பின் இவ்வழக்கின் எதிரிகளைத் தேடி எனக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடைப்படையில் காவலர்களின் உதவியுடன் மதுரை டவுன், மேலூர் மெயின்ரோடு, நெல்மண்டி வணிக வளாகத்தில் தப்பி ஓட முயன்ற பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த எதிரிகள் விஸ்வநாதன், முத்துக்குமார் என்பவர்களை 02.08.2015ம் தேதி அதிகாலை 04.00 மணி சுமாருக்கு பிடிக்கும் பொழுது எதிரிகளைக் குறைந்த பட்ச திரேக பலத்தை உபயோகித்து பிடித்து நிலையம் கொண்டுவந்து எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலும் இன்றி விசாரிக்க தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை அன்று காலை சுமார் 05.00 மணிக்கு நிலைய பாரா வசம் ஒப்புவித்து ஏற்கனவே தகவல் அளித்தன் அடிப்படையில் அங்கு வந்திருந்த மாடக்குளம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.விஜயலெட்சுமி, கிராம உதவியாளர் திரு.சேகர் ஆகியோர் முன்னிலையில் எதிரி விஸ்வநாதன் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை சுமார் 05.30 மணி முதல் 06.30 மணி வரை பதிவு செய்தேன். பிறகு 2வது எதிரி முத்துக்குமார் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை காலை சுமார் 06.30 மணி முதல் 07.30 மணி முதல் அதே சாட்சிகள் முன்பு பதிவு செய்தேன். சாட்சிகள் மற்றும் எதிரிகளிடம் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றேன்.

பிறகு எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவலர்கள் உதவியுடன் நிலைய வாகனத்தில் எதிரிகளை அழைத்துக்

கொண்டு அன்றைய தினமே 02.08.2015ம் தேதி காலை 08.00 மணி சுமாருக்கு, எதிரி விஸ்வநாதன் வீடு அமைந்துள்ள BB குளம், காமராஜர் தெரு, கதவு எண்.25க்கு சென்று எதிரி மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்த அசாபொ.15 Gold line இரத்தக்கரை படிந்த முழுக்கை சட்டை ஒன்று, அசாபொ-16.stretch என்ற லேபிளுடன் கூடிய இரத்தக்கரை படிந்த ஜீன்ஸ் பேண்ட் ஒன்று, பழுப்பு நிற மண்டை ஓடு படம் போட்ட இரத்தக்கரை படிந்த கைக்குட்டை ஒன்று, இரத்தக் கரை படியாத முண்டா பனியன் ஒன்று, TN 64 C 3229 என்ற எண்ணுள்ள யமகா சிவப்பு கலர் இரு சக்கர வாகனம் ஒன்று, இரத்தக்கரை படிந்த இரப்பரால் செய்யப்பட்ட பழுப்புநிற கையுறை ஒரு ஜோடி, மற்றும் பணம் ரூ.22,500/- ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன், சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன்.

**பழுப்பு நிற மண்டை ஓடு படம் போட்ட இரத்தக்கரை படிந்த கைக்குட்டை ஒன்று அசாபொ.26 ஆகும்.**

**இரத்தக் கரை படியாத முண்டா பனியன் ஒன்று அசாபொ.27 ஆகும்.**

**TN 64 C 3229 என்ற எண்ணுள்ள யமகா சிவப்பு கலர் இரு சக்கர வாகனம் ஒன்று அசாபொ.28 ஆகும்.**

**இரத்தக்கரை படிந்த இரப்பரால் செய்யப்பட்ட பழுப்புநிற கையுறை ஒரு ஜோடி அசாபொ.29 ஆகும்.**

**மற்றும் பணம் ரூ.22,500/-அசாபொ.30 ஆகும்.**

இவற்றிற்கான அத்தாட்சி ஏற்கனவே அதசாஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அதசாஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிறகு எதிரிகள் மற்றும் கவலர்களுடன் புறப்பட்டு சுமார் 09.30 மணிக்கு வழக்கின் மற்றொரு எதிரி முத்துக்குமார் என்பவரின் வீடான K புதூர் அழகர்கோவில் மெயின்ரோடு, டோபி காலனி, கதவு எண்.5C, வீட்டிற்குச் சென்று எதிரி முத்துக்குமார் மறைத்து வைத்திருந்து எடுத்து ஆஜர் செய்த W2,

K புதூர்,MDU7 என்ற லேபிளுடன் கூடிய எம்பிராய்டு பூ வேலைகள் செய்யப்பட்ட கருப்பு மற்றும் புளூ ஆகிய கலர்களில் பட்டை கோடுகள் கூடிய அசாபொ.17 இரத்தக் கரை படிந்த முழுக்கை சட்டை ஒன்று, EDDIE Jeans and causals என்ற லேபிளுடன் கூடிய இரத்தக்கரை படிந்த லைட் புளூ ஜீன்ஸ் பேண்ட் ஒன்றும்,

அசாபொ.1.வெள்ளை மற்றும் சிவப்பு நிற கற்கள் பதிக்கப்பட்ட தங்க தொங்கட்டான் ஒன்றும்,

அசாபொ.2. பூ வரைபடம் உள்ள தங்க மோதிரம் ஒன்று

அசாபொ.3.தென்னைமரம் வரைபடம் உள்ள தங்க மோதிரம் ஒன்றும்

அசாபொ.18. NOKIA 112 நீலம் மற்றும் கருப்பு கலர் கலந்த SIM Card உடன் கூடிய செல்போன் ஒன்று,

அசாபொ.20 FED Bank நகை அடகு வைத்த இரசீது ஒன்றும்,

இரத்தக்கரை படிந்த இரப்பரால் செய்யப்பட்ட பழுப்புநிற கையுறை ஒரு ஜோடியும்,

அசாபொ.19.சுமார் 5 செமீ இருபுறம் கத்தி பாகம் கொண்ட மொத்த நீளம் 12 செமீ, அகலம் 2.2 செமீ கொண்ட இரத்தக் கரை படிந்த சில்வர் கத்தி ஒன்றும் மற்றும்

சுமார் 10.5 செமீ நீளமுள்ள கத்தியின் உடைந்துபோன இரத்தக் கரை படிந்த காவிக்கலர் பிளாஸ்டிக் கைப்பிடி பாகம் ஒன்று,

ஆகியவற்றை அத்தாட்சியில் சாட்சிகள் முன்பு கைப்பற்றி அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன்.

**EDDIE Jeans and causals என்ற லேபிளுடன் கூடிய இரத்தக்கரை படிந்த லைட் புளூ ஜீன்ஸ் பேண்ட் ஒன்று அசாபொ.31 ஆகும்,**

**இரத்தக்கரை படிந்த இரப்பரால் செய்யப்பட்ட பழுப்புநிற கையுறை ஒரு ஜோடி அசாபொ.32 ஆகும்.**

**சுமார் 10.5 செமீ நீளமுள்ள கத்தியின் உடைந்துபோன இரத்தக் கரை படிந்த காவிக்கலர் பிளாஸ்டிக் கைப்பிடி பாகம் ஒன்று அசாபொ.33 ஆகும்-,** இவற்றின் அத்தாட்சி ஏற்கனவே அதசாஆ.10 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. 2 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அதசாஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

காவலர்கள், எதிரிகள், மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துகள், சாட்சிகளுடன் ஏற்கனவே 1 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினமே 02.08.2015 ம் தேதியன்று காலை சுமார் 11.00 மணிக்கு மதுரை மாநகர், ஆயுதப்படை குடியிருப்பு கதவு எண்.20-ல் குடியிருக்கும் சுமித்ரா, க/பெ.பாண்டியராஜன், என்பவர் வழக்கின் 2 வது எதிரி கொடுத்து வைத்திருந்ததாகக் கொடுத்து ஆஜர் செய்த அசாபொ.4 லெட்சுமி படம் போட்ட 22**CT Gold** 2006 என்று எழுதப்பட்ட தாலியில் போடக்கூடிய தங்க காசு ஒரு ஜோடி, அசாபொ.5 தாலியில் அணிக்கக்கூடிய குண்டு மணி ஒரு ஜோடி, அசாபொ.6, தங்க மாங்கலயம் ஒன்று, பணம் ரூ.9910/- ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றி சாட்சிகளிடமும், சுமித்ரா என்பவரிடமும் கையொப்பம் பெற்றேன். **அந்த பணம் ரூ.9910/- அசாபொ.34 ஆகும்.** அந்த அத்தாட்சி ஏற்கனவே அதசாஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிறகு சாட்சிகள் மாடக்குளம் கிராமநிர்வாக அலுவலர் விஜயலெட்சுமி, கிராம உதவியாளர் சேகர், சம்பவ இடத்தை ஆய்வு செய்த தனிவிரல் விரல்ரேகைப்பிரிவு திருமதி.லதாமகேஸ்வரி, மோப்பநாய் படை பிரிவு காவலர்3102 திரு.வெங்கடேஷ், சுமித்ரா, ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன், நிலையம் கொண்டுவந்தேன். எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் தடயங்களின் அடிப்படையிலும் வழக்கின் சட்டப்பிரிவை 454, 380, 302 இதச-ல் இருந்து பிரிவுகள் 454, 302, 380 மற்றும் 376 இதச ஆக பிரிவு மாறுதல் செய்து அறிக்கையை நீதித்துறை நடுவர் எண்.5 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அதசாஆ.34 ஆகும்.**

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயங்களை இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி வைப்பதற்காக படிவம் 95 மூலம் நீதித்துறை நடுவர் எண்.5 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

**31.07.2015ம் தேதி சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட தடயங்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 95 அதசாஆ. 37 ஆகும்.**

01.08.2015ம் தேதியன்று இவ்வழக்கில் கொலையுண்டு இறந்து போன கௌரி என்பவரின் பிரேததைப் பிரேத பரிசோதனை செய்து அறிக்கை வழங்கிய மருத்துவர்.திரு.மணிகண்டன் அவர்கள் தனது இறுதி மருத்துவக் கருத்துரையாக The deceased died of shock and hemorerhage due to injury No.9 Time since Death : within 24 hrs என்று வழங்கியுள்ளார்.

01.08.2015ம் தேதி கொலைசெய்யப்பட்டு இறந்துபோன கௌரி என்பவரின் பிரதேத்தின் மீதிருந்த கத்தரிப்பூக்கலரில் பூ படம் போட்ட இரத்தம் படிந்த சேலை ஒன்று **அசாபொ.35**, பச்சை கலரில் இரத்தம் படிந்த ஜாக்கெட் ஒன்று **அசாபொ.36**, வெள்ளை கலரில் இரத்தம் படிந்த பிரா ஒன்று **அசாபொ.37**, புளுகலர் பாவாடை ஒன்று **அசாபொ.38**, கருப்பு பச்சை கலரில் கட்டம் போட்ட கிழிந்து போன் உள்ளாடை ஒன்று **அசாபொ.39** ஆகிய உடைகளை பிரேத பரிசோதனைக்குபின்னர் கைப்பற்றி படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 95 அதசாஆ. 38 ஆகும்.**

அன்றைய தினமே 1 வது எதிரி விஸ்வநாதன் என்பவர் ஆஜர் செய்த தடயம் மற்றும் வழக்கு சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 95 (2 வரிசைகள்) அதசாஆ. 39 ஆகும்.**

அன்றைய தினமே 2 வது எதிரி முத்துக்குமார் என்பவர் ஆஜர் செய்த தடயம் மற்றும் வழக்கு சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 95 (3 வரிசைகள்) அதசாஆ. 40 ஆகும்.**

அன்றைய தினமே சாட்சி சுமித்ரா என்பவர் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட வழக்கின் சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி

வைத்தேன். **படிவம் 95 அதசாஆ. 41 ஆகும்.**

பிறகு எதிரிகள் மீது புலன்விசாரணை இன்னும் முடிவடையாத நிலையில் இருப்பதால் தக்க வழிக்காவல் செய்து நீதிமன்ற காவலுக்கு நீதித்துறை நடுவர் எண்.5 அவர்கள் முன்பாக ஆஜர் செய்ய அனுப்பி வைத்தேன்.

பிறகு இவ்வழக்கின் தடயச் சொத்துக்கள் மீதான பகுப்பாய்வு மேற்கொள்ள வேண்டி, நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன்.

05.08.2015 ம் தேதி வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கௌரி என்பவர் பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட VISCERA, சலைவா, வெஜினல் ஸ்வாப், ஆகியவற்றை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். அந்த வேண்டுகோள் கடிதம் ஏற்கனவே அதசாஆ.29 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினமே சாட்சிகள் சார்பு ஆய்வாளர் C.ரவிச்சந்திரன், முதல்நிலை காவலர் 899 திரு.முத்துக்குமார், முதல்நிலை காவலர் 3532 திரு.தாமோதரன், முதல்நிலை காவலர் 1623.திரு.செந்தில்குமார், ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

07.08.2015 ம் தேதியன்று எதிரிகள் இருவரையும் புலன்விசாரணையின் தொடர்ச்சியாக விசாரணைக்கு போலிஸ் காவலில் எடுப்பதற்கு நீதித்துறை நடுவர், கூடுதல் மகிளா நீதிமன்றம் அவர்களுக்கு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது.

பிறகு புலன்விசாரணை தொடர்ச்சியாக, நீதிமன்ற உத்தரவுப்படி Police custody க்கு பெற்று எதிரிகளை மீண்டும் காவல்நிலையத்தில் வைத்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர் முன்பு விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன்.

12.08.2015 ம் தேதியன்று சாட்சிகள் FED வங்கி மேலாளர் பானுமதி, எடை மதிப்பீட்டாளர் திரு.சரவணன், லெகரோ துணிக்கடை மேலாளர்.E.பிரகாஷ், லெகரோ துணிக்கடையின் விற்பனையாளர் திரு.லெட்சுமிபதி, VAO விஜயலெட்சுமி, கிராம உதவியாளர் சேகர்

ஆகியோரைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

12.08.2015 ம் தேதியன்று சுமார் 12.00 மணிக்கு மதுரை டவுன் அண்ணாநகர், 80 அடி ரோட்டில் முதல் மாடியில் கதவு எண்.59 ல் உள்ள FED வங்கியிலிருந்து துணை மேலாளர் திருமதி.பானுமதி என்பவர் ஆஜர் செய்த எதிரிகள் விஸ்வநாதன் மற்றும் முத்துக்குமார் அடையாளம் காண்பித்த சொத்துக்களான

1) அசாபொ.7.மொத்த நிகர எடை 24.9 கிராம் எடையுள்ள தங்க செயின் ஒன்று

2) அதசாஆ.17 - 2 வது எதிரி முத்துக்குமார் பெயரில் நகை அடகு வைத்த இரசீது ஒன்று

3) அதசாஆ.16- 31.07.2015 ம் தேதி FED வங்கியின் வாடிக்கையாளர்கள் வருகைப் பதிவேட்டின் நகல் ஒன்று

4)அதசாஆ.19- எதிரி முத்துக்குமார் பெயரில் 31.07.2015 ம் தேதி நகை அடகு வைத்ததற்கான வங்கியில் உள்ள ஆவண நகல்கள் 8 பக்கங்கள்

5) அசாபொ.21 - 31.07.2015 ம் தேதி எதிரிகள் FED வங்கிக்கு வந்து சென்ற பதிவு செய்யப்பட்ட வீடியோ பட CD ஒன்று

6) அசாபொ.22 - 31.07.2015 ம் தேதி எதிரிகள் FED வங்கிக்கு வந்து சென்ற விபரம் பற்றிய Copy செய்யப்பட்ட Transend 4 GB pen drive ஒன்று

7) அதசாஆ.18 - FED வங்கியின் அங்கீகாரத்திற்கான RC நகல் ஒன்று

ஆகியவற்றை படிவம் 95 மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **அந்த படிவம் 95 (2 வரிசைகள்) அதசாஆ. 42 ஆகும்.** அந்த அத்தாட்சி ஏற்கனவே அதசாஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிறகு அன்றைய தினமே 12.08.2015 ம் தேதி மதுரை கோரிப்பாளையம் அழகர்கோவில் ரோடு, லெகரோ துணிக்கடையில் வைத்து மேலாளர் திரு.பிரகாஷ் என்பவர் எடுத்து ஆஜர் செய்த எதிரிகள் 31.07.2015 ம் தேதி வாங்கிய Tshirt-2. Jeans-1. Jeans-1, மொத்தம் ரூ.2015/-ற்கான பில் நம்பர் 2118 ற்கான அசாபொ.24-இரசீது நகல் ஒன்று

ஆகியவற்றை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 95 அதசாஆ.43 ஆகும்.**

அன்றயை தினமே 1 வது எதிரி வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த அசாபொ.23 - LG-CE0168 wireless சிவப்பு கலர் செல்போன் ஒன்று, அதன் IMEI Number 359932030431762

பேட்டரி எண். SBPL0091401.APCDC100408

SANDISK memory card ஒன்று 2GB

micro Airtel SIM Number - 8991940000200797524 3H2

ஆகியவற்றை அதசாஆ.14 அத்தாட்சியில் கைப்பற்றி படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 95 அதசாஆ.44 ஆகும்.**

13.08.2015 ம் தேதியன்று படிவம் 95 மூலம் சாட்சி சரவணன் என்பவர் நிலையம் வந்து ஆஜர் செய்த எதிரிகள் விஸ்வநாதன் மற்றும் முத்துக்குமார் சம்பவத்தின் போது பயன்படுத்த வாங்கிய கத்தி மீனாட்சி பேன்சி ஸ்டோர், மதுரை வடக்கு ஜில்லா, கடையின் வாடகை ஒப்பந்த இரசீது நகலை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த இரசீது நகல் அதசாஆ.45 ஆகும்**(எதிரி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). **படிவம் 95 அதசாஆ.46 ஆகும்.**

13.08.2015 ம் தேதி எதிரிகள் விஸ்வநாதன், முத்துக்குமார் சம்பவத்திற்கு பயன்படுத்திய இரப்பர் கையுறைகளை வாங்கிய K புதூர் அழகர்கோவில் மெயின்ரோடு, EMG நகர், 3 வது தெரு எண்.1 மற்றும் 2 என்ற இடத்தில் இயங்கிவந்த அழகு மெடிக்கல் ஸ்டோர் வாடகை ஒப்பந்தம் மற்றும் கடையின் உரிமம் ஆகியவற்றின் நகல்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அழகு மெடிக்கல் ஸ்டோர் வாடகை ஒப்பந்தம் மற்றும் கடையின் உரிமம் நகல் (2 வரிசை) அதசாஆ.47 ஆகும்** ( எதிரி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). **அந்த படிவம் 95 அதசாஆ.48 ஆகும்.**

பிறகு எதிரிகளின் தொலைபேசி எண்கள், எதிரிகளிடம் இருந்து பெறப்பட்ட SIM CARD களின் IMEI Number , இறந்த கௌரி மற்றும் அவரது கணவர் ஆகியோரின் எண்களுக்கு வேண்டுகோள் கடிதம் CCRB க்கு CDR பெறவேண்டி கொடுத்தனுப்பினேன்.

13.08.2015 ம் தேதி அழகு மெடிக்கல் ஸ்டோர் நடத்திவரும் திரு.தேனப்பன், மீனாட்சி பேன்சிஸ்டோர் நடத்தி வரும் திரு.சரவணன், எனது விசாரணையின் போது உடன் இருந்த SAMSUNG TV மெக்கானிக் திரு.அருண்குமார் ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

18.08.2015 ம் தேதியன்று இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் நீதித்துறை நடுவர், கூடுதல் மகிளா நீதிமன்றம் அவர்களின் உத்தரவுப்படி RPR No. 14/2015 நாள் 17.08.2015 ம் தேதி மேற்படி நீதிமன்றத்தின் தலைமை எழுத்தரான திருமதி.பத்மாவதி அவர்களிடம் ஒப்படைத்து அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். RPR No.14/2015 ல் கண்ட 20 வழக்கு சொத்துக்களையும் தடயங்களையும் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு MDU/BIOL/3202015 தேதி 18.08.2015 பிரகாரம் பகுப்பாய்விற்கு ஒப்புவித்த தலைமை காவலர் 1025 திரு.மகாலிங்கம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

07.09.2015 ம்தேதி இவ்வழக்கின் சாட்சியும், வாதியின் மகளுமான சிறுமி ஸ்வந்திகா என்பவரிடம் பிரிவு 164 குவிமுச படி வாக்குமூலம் பெறவேண்டி, நீதித்துறை நடுவர், கூடுதல் மகிளா நீதிமன்றம் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது.

08.09.2015 ம் தேதி வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கௌரி என்பவரின் பிரேதத்தைப் பரிசோதனை செய்து அறிக்கை கொடுத்த அரசு மருத்துவர் திரு.மணிகண்டன் MBBS,MD, Assistant professor, மதுரை மருத்துவக் கல்லூரி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அதசாஆ.25 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன்.

16.09.2015 ம் தேதியன்று இவ்வழக்கின் தடய சான்றுகளை

பகுப்பாய்வு செய்து ஆய்வறிக்கை அளித்த மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வக Scientific officer திரு.விஜயேந்திரன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

14.10.2015 ம் தேதியன்று சாட்சி சிறுமி ஸ்வந்திகா என்பவருக்கு பிரிவு 164 குவிமுச படி இரகசிய வாக்குமூலம் பதிவு செய்ய நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் முன்பு ஆஜர் செய்யப்பட்டார். அந்த பிரிவு 164 குவிமுச வாக்குமூலம் ஏற்கனவே அதசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து கூடுதல் இயக்குநர், சட்டத்துறை அவர்களிடம் கருத்துரை பெற்று 1 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 120(b),454, 380, 302 r/w 34 இதச படியும், 2 வது எதிரி மீது பிரிவுகள் 120(b),454, 380, 302 and 376 r/w 34 இதச படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

புகார் கொடுப்பதற்கு முன்னரே ஒரு வழக்கின் புலன் விசாரணையை தொடங்க முடியாது என்றால் சரிதான். அதேபோல், புகார் கொடுப்பதற்கு முன்னரே சம்பவ இடம் சென்று, பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரணை செய்யது அத்தாட்சி தயார் செய்ய முடியாது என்றால் சரிதான். அவ்வாறு புகார் பெறுவதற்கு முன்னரே நான் மேற்கண்டவாறு செய்திருந்தால் அது தவறு என்றால் சரிதான். மதுரையில் மிகப்பெரிய ஆள்வரை எல்லை கொண்டது SS காலனி காவல்நிலையம் என்றால் சரிதான். அதேபோல் மதுரையில் CCTV பொறுத்தப்பட்ட முதல் சீர்மிகு காவல்நிலையம் SS காலனி காவல்நிலையம் தான் என்றால் சரியல்ல. SS காலனி காவல்நிலைய எல்கைகள் விரிவாக உள்ளதால், குற்றச்சம்பவங்களைத் தடுக்கும் பொறுட்டு முக்கிய இடங்களிலும், சாலைகளிலும், சிக்னல்களிலும் அப்போது இருந்த commissioner முயற்சியால் பொதுமக்கள் மற்றும் குடியிருபோர் சங்கத்தின் பங்களிப்போடு CCTV கேமிரா பொறுத்தப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடமான

பைபாஸ், மலைமகள் நகர், வானமாமலை நகர், துரைச்சாமி நகர், ஆகியவை VIP க்கள் குடியிருக்கும் முக்கியப் பகுதி என்றால் சரிதான். மேற்படி பகுதிகளில் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பில் CCTV கேமிரா பொறுத்தப்பட்டிருந்து என்றால் சரிதான். சம்பவம் குறித்து IS க்கு தகவல் சொன்னது யார், சொன்ன நேரம் என்னவென்று எனக்கு நினைவில் இல்லை. போலிஸ் மோப்பநாய் பிரிவு, விரல்ரேகை பிரிவு ஆகியவற்றிற்கு நான் தான் தொலை பேசி மூலம் தகவல் சொன்னேன். அரசினால் வழங்கப்பட்ட CUG எண்ணில் இருந்து தகவல் சொன்னேன். சம்பவ சமயத்தில் நான் பயன்படுத்திய CUG எண் 9498179994 ஆகும். இது BSNL தொலைதொடர்பு எண் ஆகும். மேற்சொன்ன பிரிவுகளுக்கு IS மூலம் தகவல் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் IS தகவல் கொடுத்தது பற்றி எனக்குத் தெரியாது. சம்பவ சமயத்தில் எனக்கு CUG எண் தவிர தனிப்பட்ட செல் எண் இருந்ததா என்றால் இல்லை. CUG எண் மட்டுமே பயன்படுத்தினேன். சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் மலைமகள் நகர் பகுதி குடியிருப்புகள் நெருக்கமாக உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்த முத்துச்செல்வி இல்லமானது 6 வீடுகளைக் கொண்ட ஒரு காம்பவுண்டு வீடு என்றால் சரிதான். அதில் தரை தளத்தில் 3 வீடுகளும், முதல் தளத்தில் 3 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த காம்பவுண்டு வீட்டிற்குள் நுழைய வேண்டும் என்றால், அந்த வீட்டின் காம்பவுண்டுடன் கூடிய ஒரு கிரில் கேட்டைத் தாண்டித்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அந்த கிரில் கேட் எப்போதும் பூட்டு போட்டு பூட்டியே தான் இருக்கும் என்றால் சரியல்ல. எனது விசாரணையில், அந்த காம்பவுண்டு வீடு எப்போதும் திறந்து இருக்கும் என்று எந்த சாட்சியும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற வீடு முதல் தளத்தில் கடைசி வீடு என்றால் சரிதான். அங்குள்ள 6 குடும்பத்தில் உள்ளவர்களையும் நான் விசாரணை செய்தேன். அந்த காம்பவுண்டில் குடியிருந்த, கார்த்திக், ஜான், முத்துப்பாண்டி, சுப்பிரமணி ஆகியோரை நான் விசாரணை செய்து சாட்சியாக சேர்த்தேனா என்றால் அவர்களை நான் விசாரித்தேன். ஆனால் சாட்சியாக சேர்க்கவில்லை. புகார்தாரரின் பக்கத்து

வீட்டில் வசிக்கும் விஜயபாலனை விசாரணை செய்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கொலை, கொள்ளை வழக்குகளில் நேரடி சாட்சிகள் (Eye witnesses) இல்லாத போது சூழ்நிலை சாட்சிகள் தான் முக்கிய பங்கு வகிக்கும் என்றால் சரிதான். மேற்சொன்ன நபர்கள் அனைவரும் சூழ்நிலை சாட்சிகள் என்றும் அவர்களை ஏன் நான் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. தேவையில்லை என்பதால் சேர்க்கவில்லை. புகார்தாரரின் பக்கத்து வீட்டில் இருக்கும் சங்கீதா மற்றும் அவரது அம்மா மஞ்சுளா ஆகியோரை சூழ்நிலை சாட்சியாக சேர்த்துள்ளேன். சம்பவம் நடைபெற்ற வீட்டின் வரைபடத்தில், வீட்டின் ஹாலில் ஜன்னல்கள் இருந்ததையும், கீரில் கேட் இருந்ததையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல், சமையல் அறையில் இருந்த பாத்திரம் கழுவும் சிங்க் தொட்டி மற்றும் குழாய்கள் எங்கெங்கு இருந்தன என்று வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவைகள் அவசியப்படாததால் குறிப்பிடவில்லை. உண்மையிலேயே நான் சம்பவ இடம் சென்று முறையாக விசாரணை செய்திருந்தால், சிங்க், குழாய்கள் ஆகியவற்றினை வரைபடத்தில் காட்டியிருந்தால் குற்றவாளிகள் கை, கால் முகம் இரத்ததை சுத்தம் செய்திருந்தது தெரியவந்திருக்கும் என்றால் சரிதான். யாரை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக சிங்க் தொட்டியினையும், குழாய்களையும் வரைபடத்தில் காட்டவில்லை என்றால் யாரையும் காப்பாற்றுவதற்காக அல்ல. உண்மையிலேயே நான் சம்பவ இடம் போகவில்லை என்றும், அதனால் தான் வீட்டில் ஜன்னல், கிரில் கேட், சிங்க் ஆகியவை இருந்த விபரம் பற்றி தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்த கௌரியின் உடலை 5 மணி நேரத்திற்கும் மேலாக காரில் அசா1 ம், அசா3 ம் அவர்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் சுமார் 7 மணி நேரம் காலதாமதமாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சுமார் 4 மணி நேரம் கழித்து புகார் அளிக்கப்பட்டுள்ளது. புகார் அளிக்க காலதாமதத்திற்கு என்ன காரணம் என்று புகார்தாரரிடம் இருந்து எனது புலன்விசாரணையில்

தெரிந்து கொண்டேனா என்றால் உறவினர்களுக்குத் தகவல் சொல்லிவிட்டு அவர் இருந்த மனநிலையில் புகார் அளிக்க காலதாமதம் ஏற்பட்டதாகச் சொன்னார். இறந்த கௌரியின் பிரேதத்தை அவரது கணவரும், அவரது நண்பரும் அவர்கள் கட்டுப்பாட்டில் 5 மணி நேரம் வைத்திருந்தார்கள் என்றும் அதனால் தான் புகார் அளிக்க தாமதம் என்று சொன்னால் சரியல்ல. மனைவி இறந்ததை சரியாகக் கணிக்கமுடியாமல், மனைவியைக் காப்பாற்றுவதற்காக புகார்தாரர் அவரது நண்பருடன் அரிஸ்டோ ஆஸ்பத்திரிக்குச் சென்றதால் காலதாமதம் ஏற்பட்டதாக எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன். காரில் வைத்திருந்தால், அந்த காரின் உரிமையாளர், டிரைவர் மற்றும் அதன் பதிவெண் ஆகியவற்றை சொல்லவேண்டும் என்பதாலும் அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவேண்டும் என்பதாலும் அது பற்றி நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய புலன்விசாரணையின் படி புகார்தாரரும், அவரது நண்பரும் அசா1 ன் மனைவியை காரில் ஏற்றிக்கொண்டு அரிஸ்டோ மருத்துவமனைக்குச் செல்லும்போது நேரம் எவ்வளவு இருக்கும் என்றால் மதியம் 14.00 மணிக்கு மேல் 15.30 மணிக்குள்ளாக இருக்கலாம். கௌரியின் இறப்பு குறித்து புகார்தாரர் எங்கு வைத்து தெரிந்து கொண்டார் என்றால் வீட்டிற்கு வரும் போது தெரிந்து கொண்டார். அசா1 அவரது வீட்டிற்கு வரும்போது நேரம் சரியாக என்ன என்றால் 04.15 மணிக்கு வீ டிற்கு வந்ததாக சொல்லியுள்ளார். பிரேத விசாரணை அறிக்கையின் படி, கௌரியின் இறப்பு குறித்து அரிஸ்டோ மருத்துவமனை மருத்துவர்.ஜெயசங்கர் என்றால் சரிதான். அரிஸ்டோ மருத்துவமனையில் கௌரியின் இறப்பு குறித்து விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டிருந்ததா என்றால் பதிவு செய்யப்பட்டிருந்தது. அரிஸ்டோ மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டை இந்த வழக்கில் அரசு தரப்பு சான்றாவணமாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதுபோல் கௌரியின் இறப்பை உறுதி செய்த மருத்துவரை சாட்சியாக சேர்க்கவில்லை. விசாரித்தேன். மரணத்தை உறுதி செய்த மருத்துவரின் சாட்சியம் மிக முக்கியமானது என்று புலன்விசாரணை

அதிகாரியான எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி விபரம் எனக்குத் தெரிந்த போதும் மருத்துவர்.ஜெயசங்கரை நான் ஏன் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதால் நான் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரணை செய்தேன். இந்த வழக்கின் சாட்சிகளான குழந்தைகளை பள்ளியிலிருந்து அழைத்து வந்ததாகச் சொல்லப்படும் வேன் டிரைவரை நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே வேன் டிரைவரை விசாரணை செய்திருந்தால் தான்., குழந்தைகள் பள்ளிக்கு வேனில் சென்று வருவார்களா என்ற விபரம் தெரியும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்த கௌரியின் புகைப்படமோ, சம்பவ இடத்தின் புகைப்படமோ தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அவைகள் அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த புகைப்பட கலைஞரையும் நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனையின் போது, மருத்துவரிடம் கொடுக்கப்பட்ட வழக்கின் சரித்திரத்தில் சந்தேக மரணம் என்று தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிஹவ செய்யப்பட்ட பிறகு தான் பிரேத பரிசோதனைக்கு கௌரியின் உடல் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கை முடிந்த பிறகு, எதிரிகளை வழக்கில் சிக்கவைக்க வேண்டும் என்பதற்காக 302 இதச பிரிவு படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நேரம் மதியம் 01.15 முதல் 04.15 இருக்கும் என்று எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் எனது அனுபவம் மற்றும் அரசு மருத்துவரின் வாய்மொழி கருத்துரையின் படி இறந்த நேரம் கணிக்கப்பட்டது. இறந்தவர் வீட்டிலேயே இறந்துவிட்டதாக உறுதி செய்த பிறகு, உடனே காவல்நிலையத்திற்குத் தகவல் சொல்லியிக்க வேண்டும் என்றால் சரிதான். கொலை வழக்குகளில், கொலை செய்யப்பட்டவரின் உடலை சம்பவ இடத்தில் இருந்து காவல்துறையினர் ஒப்புதல் இல்லாமல் உடலை அப்புறப்படுத்துவது குற்றம் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து கௌரியின் உடலை அப்புறப்படுத்திய

கணவர் வெங்கடசேன் மீதும், அவருக்கு உதவியாக இருந்த அவரது நண்பர் செந்தில்குமார் என்பவர் மீதும் காவல்துறையினர் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குற்றம் என்று சொல்லி. அதைச் செய்தவர்களைத் தப்பிக்க வைக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து பிரேதத்தை அப்புறப்படுத்தினால் தடயங்களை அழிக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். தடயத்தை அழிக்க வேண்டும் என்பதற்காகவே, வேண்டுமென்றே, அசா1ம் அசா3ம் அவரது பிரேதத்தை அப்புறப்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் இரவு 08.00 மணிக்குக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பிரேதத்தை அப்புறப்படுத்தும் போது இறந்த பெண்ணின் உடலை அவரது கணவர் வெங்கடேசன் பிரேத்தை தூக்கிக்கொண்டு போகாமல், பிரேதத்தின் காலைப்பிடித்து தரதரவென்று இழுத்துக்கொண்டு சென்றுள்ளார் என்றால் சரியல்ல. இறந்த கௌரியின் பிரேதத்தின் காலைப் பிடித்து தரதரவென்று இழுத்துச் சென்றதால் தான் தரை முழுவதும் இரத்தம் சிந்தி கிடந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. அசா1., இறந்த நபரின் பிரேத்தை இழுத்துச் சென்றதை பக்கத்து வீட்டில் வசிக்கும் அசா4.சங்கீதா என்பவர் பார்த்துள்ளார் என்றால் சரியல்ல. இரத்தம் மாடிப்படி முழுவதும் சிந்தி சிதறிக்கிடந்ததை நான் எனது பார்வை மகஜரிலோ, வரைபடத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1 அங்குள்ள தடயங்களை அழிப்பதற்காகத்தான் தன் நண்பரின் உதவியோடு கௌரியின் உடலை அப்புறப்படுத்தியுள்ளார் என்றும் அதற்கு உதவியாக இருந்த நானும் பார்வை மகஜரிலும், வரைபடத்திலும் இரத்தம் சிந்திக்கிடந்ததைக் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ வீட்டில், மார்பில், கட்டில், சோபா ஆகியவற்றில் இருந்த இரத்தங்கள், அசா1 கௌரியின் உடலை அப்புறப்படுத்தியபோது ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே தான் வழக்கின் புகார்தாரர் உடனே காவல்நிலையத்திற்குச் சென்று புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்த பிரேதத்தை தொட்டுத் தூக்கும் போது பிரேதத்தில் இருந்த இரத்தம் அதைத்

தூக்கியவர்கள் மீதும் பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். அப்படி இரத்தம் பட்ட, அசா1, அசா3ன் உடைகளை கைப்பற்றி நான் பகுப்பாய்விற்கு அனுப்பினேனா என்றால் கைப்பற்றவில்லை. அனுப்பவில்லை. வழக்கில் புகார்தாரரை காப்பாற்றவேண்டும் என்ற ஒன்றை கெட்ட எண்ணத்தில் தான் அவரது உடைகளை நான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒருவர் கொலை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டதில் இருந்து பிரேதத்தை அப்புறப்படுத்தி, அதன்பின்னர் 4 முதல் 5 மணி நேரம் யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும் தடயங்கள் மறைப்பதற்கும் அழிவதற்கும் வாய்ப்புண்டு என்றால் சரிதான். கௌரியின் தொண்டைக் குழியில் காயம் இருந்ததை புகார்தாரர் வெங்கடேசன் எப்போது பார்த்தார் என்றால் வீட்டில் வைத்துப் பார்த்ததாக எனது விசாரணையில் சொன்னார். இறந்த கௌரியை அசா1 அரிஸ்டோ மருத்துவமனைக்கு கூட்டிச்செல்லும்போது, மேற்படி காயத்தை காரில் வைத்து பார்த்ததாக சொல்வது தவறு என்றால் அரிஸ்டோ மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்போது காரில் வைத்து அசா1 மேற்படி காயத்தினைப் பார்த்துள்ளார். அந்த காரின் டிரைவர், காரின் உரிமையாளர், காரின் பதிவெண் ஆகிய விபரங்களை நான் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன். அசா1 ஐ வழக்கில் இருந்து தப்பிக்க வைப்பதற்காக மேற்படி சூழ்நிலை சாட்சிகளை நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அசா1 வீட்டில் இருந்து காரில் கிளம்பும் போது நேரம் என்ன இருக்கும் என்றால் 04.15 மணிக்கு மேலாக இருக்கும். 04.15 மணி முதல் எத்தனை மணி முதல் அசா1, அசா3 மற்றும் இறந்த கௌரியின் பிரேதம் காரில் இருந்தது என்றால் 2 முதல் 2 ½ மணி நேரம் இருந்திருக்கும். அரிஸ்டோ மருத்துவமனையில் இருந்து SS காலனி காவல்நிலையத்திற்கு காரில் செல்லவேண்டும் என்றால் சுமார் 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். எனது புலன்விசாரணைப்படி, இறந்த கௌரி வன்புணர்ச்சி செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் பிரேதத்தை பிணக்கூராய்விற்கு மருத்துவரிடம் கொடுத்த வழக்கின் சரித்திரத்தில் வன்புணர்ச்சி பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால்

சரிதான். உண்மையிலேயே இறந்த கௌரி வன்புணர்ச்சி செய்யப்பட்டு கொலை செய்யப்படவில்லை என்றும் அதனால் தான் அது பற்றி பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்துடன் அளித்த வழக்கின் சரித்திரத்தில் அது பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும் வரை கௌரி வன்புணர்ச்சி செய்யப்பட்டது பற்றி விசாரணையில் தெரியவந்தது. எனது விசாரணையில், அசா3 செந்தில்குமார், "இறந்த பெண்ணின் கணவர் வெங்கடேசன் மதியம் 02.00 மணியளவில் பைபாஸ் ரோட்டில் இருந்தார்" என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மதியம் 02.00 மணிக்கு பைபாஸ் சாலையில் இருந்த அசா1 தான், தனது மனைவியுடன் உடலுறவு வைத்துக்கொண்டு கொலை செய்துவிட்டு பொய்யான புகாரினைக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் கௌரியின் பிரேதத்தை அனுமதித்த மருத்துவரின் பெயர் என்னவென்றால் நினைவில் இல்லை. இந்த வழக்கில் விபத்து பதிவேட்டை நான் கைப்பற்றினேன். மருத்துவர்.சுமதி என்பவர் தான் கௌரியின் உடலை மருத்துவமனையில் அனுமதித்து விபத்து பதிவேட்டினை பதிவு செய்த மருத்துவர் ஆவார். அவரை நான் வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. விசாரணை செய்தேன். அவர் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் எங்கள் வழக்கு கோப்பில் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. விபத்து பதிவேட்டில் உள்ள பதிவுகளும், பிரேத பரிசோதனையில் உள்ள காயங்களும் ஒத்துப் போகிறாதா என்றால் விபத்து பதிவேடு நகல் எங்கள் வசம் இல்லாததால் என்னால் சொல்ல இயலவில்லை. கொலை வழக்குகள் தான் விபத்து பதிவேடு தான் முதல் சான்றாவணம் என்றால் சரிதான். கௌரியின் பிரேதத்தை அரசு மருத்துவமனையில் சேர்த்த நபர் யார் என்றால் அசா1 மற்றும் அசா3 சேர்த்துள்ளார்கள். வெங்கடேசன் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும்போது காவல்நிலையத்தில் இருக்கும்போது அவர் கௌரியை மருத்துவமனையில் சேர்த்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. பிரேதத்தை மருத்துவமனையில் சேர்த்த பிறகு தான் காவல்நிலையதிற்கு

அசா1 புகார் கொடுக்க வந்தார். விபத்து பதிவேட்டின் படி இறந்த கௌரியின் நோயாளி எண். 12243 என்றால் வழக்கு கோப்பில் ஆவணம் இல்லாததால் சொல்ல இயலவில்லை. 08.50 மணிக்கு பிரேதத்தினை மருத்துவமனையில் சேர்த்த அசா1-ஆல் காவல்நிலையத்தில் 08.00 மணிக்கு புகார் அளித்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எனது காவல்நிலைய காவலர் முதல்நிலை காவலர் 1623 திரு.செந்தில்குமார் அவர்களை நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளேன். அவரது பிரிவு 161(3) குவிமுச வாக்குமூலத்தின் படி எத்ததனை மணிக்கு மருத்துவமனையில் பிரேதத்தினை ஒப்படைத்துள்ளார் என்றால் வாக்குமூலத்தில் நேரம் குறிப்பிடவில்லை. பிரேத விசாரணை அறிக்கையில், பஞ்சாயத்தார்களாக இருந்த யாரையும் வழக்கின் சாட்சிகளாக நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். பிரேத விசாரணை சாட்சிகள் அனைவரும் இறந்த கௌரிக்கு வேண்டியவர்கள் என்றால் சரிதான். பஞ்சாயத்தார்கள், இறந்த கௌரிக்கு வேண்டியவர்கள் என்பதால் கொலைக்கு காரணம் வெங்கடேசன் தான் என்று சொல்லிவிடுவார்கள் என்பதால் அவர்களை வழக்கின் சாட்சிகளாக நான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பிரேத விசாரணையின் படி இறந்த கௌரிக்கு எத்தனை காயங்கள் என்றால் நடுக்கழுத்தில், கத்திக்குத்து காயம், இடது கால்முட்டியில் சிராய்ப்புக்காயம், இடது கால் பாதம் மேல் சிராய்ப்புக்காயம், மேல் மற்றும் கீழ் உதட்டில் இடது மற்றும் வலது ஓரங்களில் காயம், நடுக்கழுத்தில் கத்தி குத்து காயத்திற்கு மேல் ஒரு சிறிய காயம் காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன். பிரேத விசாரணை அறிக்கையில், சிராய்ப்புக்காயங்களுக்கு பிரேதத்தை தரதரவென்று இழுத்துச் சென்றது தான் காரணம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இறந்த கௌரியை அசா1 தரதரவென்று இழுத்துச் சென்றதை பக்கத்து வீட்டில் வசிக்கும் சங்கீதாவும் அவரது தாயார் மஞ்சுளாவும் பார்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அசா2 ன் பிரிவு 164 குவிமுச வாக்குமூலம் 3 மாதம் கால தாமதத்திற்குப் பிறகு தான் பதிவு செய்யப்பட்டள்ளது என்றால் சரிதான். கொலை வன்புணர்ச்சி வழக்குககளில்

164 குவிமுச வாக்குமூலம் எவ்வளவு வேகத்தில் பெறமுடியுமா அவ்வளவு வேகத்தில் பெற வேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது என்றால் சரிதான். அரசு தரப்பு வழக்கினை, அசா2 சிறுமியின் வாக்குமூலம் ஒத்துப்போக வேண்டும் என்பதால் 3 மாத காலம் பயிற்சி தேவைப்பட்டதால் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்ய காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சிறுமியின் மனநிலை மற்றும் தாயாரின் இறப்பை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இல்லாததால் காலதாமதம் ஏற்பட்டது. அசா2 சிறுமிக்கு முறையான கவுன்சிலிங் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஆனால் சிறுமியின் தந்தை மற்றும் உறவினர்கள் சிறுமிக்கு ஆறுதல் சொல்லியுள்ளார்கள். அசாபொ.38 ல் தேதி, வரிசை எண் ஆகியவை whitener பயன்படுத்தி மாற்றம் செய்யப்பட்டள்ளது என்றால் சரிதான். அந்த தேதிகள் மற்றும் சான்று பொருட்களின் வரிசை எண்கள் மற்றும் கீழே உள்ள தேதி 01.08.2015 என்று ஒரு கையெழுத்தில் வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் உள்ள ஆவணங்களில் whitener பயன்படுத்தக்கூடாது என்று தெரியும். அது போல 12.08.2015 ம் தேதியிட்ட அதசாஆ.42 படிவம் 95 லும் whitener பயன்படுத்தப்பட்டு சான்றுப்பொருட்களின் வரிசை எண்கள் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். Whitener பயன்படுத்தியது, வழக்கின் ஆவணங்களை புகார்தாரருக்கு ஆதரவாக வழக்கிற்கு ஏற்றாற்போல் alteration செய்வதற்குத்தான் என்று சொன்னால் சரியல்ல. அரிஸ்டோ மருத்துவமனை சார்ந்த எவரையும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அரிஸ்டோ மருத்துவமனைக்கு கௌரியின் உடலை அசா1 கொண்டு செல்லவேயில்லை என்பதால் அரிஸ்டோ மருத்துவமனையில் யாரும் சாட்சியாக இருக்கமுடியாது என்று சொன்னதால் தான் அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையான எதிரி வழக்கின் புகார்தாரர் வெங்கடேசனை காப்பாற்றவே, போலிசார் ஏற்படுத்திக்கொடுத்த பொய்யான விஷயமே அரிஸ்டோ மருத்துவமனை என்றால் சரியல்ல. SS காலனி காவல்நிலையத்தில் புகார்தாரர் வெங்கடேசன்

ஒரு ஏட்டைய்யாவிடம் தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நானும் அப்போது பணிபுரிந்த திலகர்திடல் காவல்நிலைய ஆய்வாளர் திரு.ராஜபாண்டியும் உறவினர்கள் என்றால் சரிதான். 31.07.2015 ம் தேதி நான் எனது பணியிலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. Police standing order 216 என்பது inspector records பற்றி கூறுவது என்றால் சரிதான். அந்த Records களை நாங்கள் பயன்படுத்த வேண்டும் என்றால் சரிதான். அந்த ஆவணங்களைப் பார்த்தால் 31.07.2015 ம் தேதியன்று நான் பணியில் இல்லை என்பது தெரியவரும் என்றால் சரிதான். நான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இந்த வழக்கில் இறந்த கௌரியை அசா1 ம் அவரது உறவினர்களும் தான் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக எனது விசாரணையில் அசா1 சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். இந்த வழக்கு சம்பந்தமாக அசா1 ஐ நான் 10 முறைக்கு மேல் விசாரணை செய்திருப்பேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், வரைபடம், அத்தாட்சிகள் அனைத்தும் போலிஸ் தரப்பில் யார் தயார் செய்தார்கள் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அவரது பெயர் நினைவில் இல்லை. அந்த சிறப்பு உதவி ஆய்வாளரை நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், வரைபடம், அத்தாட்சிகள் ஆகியவற்றில் உள்ள எழுத்துக்கள் என்னுடையது இல்லை என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையிலும் whitener பயன்படுத்தப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசா1 ஐ தப்பிக்க வைப்பதற்காக மேற்படி ஆவணத்தை நான் திருத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. கொலை வழக்குகளில் Express FIR தான் பதிவு செய்யவேண்டும் என்றும் அது உடனடியாக நீதிமன்றத்திற்கும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 01.08.2015 ம் தேதியன்று தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 31.07.2015 ம் தேதியிட்ட அத்தாட்சியில், கைப்பற்றப்பட்ட வரிசை எண்.7 ல் குறிப்பிடப்பட்டள்ள

கைலி யாருடையது என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் வீட்டில் இருந்தவர்களின் கைலி., அசா1ன் வீட்டில் அசா1 தான் ஆண் நபர் என்றால் சரிதான். அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ள வரிசை எண்.7ல் உள்ள கைலி அசா1ன் கைலி என்றால் இருக்கலாம். அந்த கைலியில் விந்தணுக்கள் உள்ளனவா என்று பகுப்பாய்விற்கு அனுப்பியுள்ளேனா என்றால் பகுப்பாய்விற்கு அனுப்பினேன். விந்தணுக்கள் இருந்தனவா என்பதற்காக அனுப்பவில்லை. அந்த கைலி சம்பவ சமயத்தில் அசா1ஆல் தனது மனைவியுடன் உடலுறவு கொள்ளப்பட்டு, அதன் பின்னர் அவரது மனைவி கௌரியை கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட கைலி என்றால் சரியல்ல. நான் குறிப்பாக, விந்தணு உள்ளதா என்று பகுப்பாய்விற்கு அனுப்பியிருந்தால் அதில் அசா1ன் விந்தணுக்கள் தான் என்று அறிக்கை வந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் மிளகாய் பொடி தான் கொட்டிக்கிடந்தது என்றால் சரிதான். எனக்கு மஞ்சள் பொடிக்கும் மிளகாய் பொடிக்கும் வித்யாசம் தெரியும். சம்பவ இடத்தில் கொட்டிக்கிடந்தது மஞ்சள் பொடிதான் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் மிளாகய் பொடி டப்பாவை நான் அத்தாட்சியில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். மிளகாய் பொடி டப்பாவை கைப்பற்றியிருந்தால் அதில் சம்பவத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் கைரேகை பதிவாகியிருக்கும் என்றால் சரிதான். உண்மையிலேயே நான் மிளகாய்பொடி டப்பாவைக் கைப்பற்றினேன் என்றும் அதில் அசா1ன் கைரேகை இருந்ததால் இந்த வழக்கில் அந்த டப்பாவை அத்தாட்சியில் சேர்க்கவில்லை என்றால் சம்பவ இடத்தைப் பார்வையிட்ட தனிவிரல் ரேகை நிபுணர், காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்படி இடத்தில் எவ்விதமான விரல்ரேகை பதிவுகளையும் develop செய்வதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிவித்ததால் அதை கைப்பற்றுவதற்கான அவசியம் இல்லை. இடம் என்பது வேறு பொருள் என்பது வேறு என்றால் சரிதான். என் சட்டை அளவு எண்.44 ஆகும். இந்த வழக்கில் எதிரியாக நிற்கும் ஆஜர் எதிரி விஸ்வநாதன் எனது உடல் அளவில் இருப்பார் என்றால் என்னுடன் அதிகமாக இருப்பார். இந்த வழக்கில்

02.08.2015 அன்று கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் சட்டையின் அளவு 40 என்று உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரிக்கும் சட்டைக்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. என்னைவிட உடலளவில் அதிகமாக உள்ள நபர் 46, 48 அளவு தான் இருக்கும் என்றால் சரியல்ல. உண்மையிலேயே அது 1 வது எதிரி விஸ்வநாதனின் சட்டையாக இருந்திருந்தால் அதில் அவரது வேர்வை படிந்திருக்கும் என்றால் சரிதான். தற்போதுள்ள அறிவியல் வளர்ச்சியின் படி, வேர்வை, உமிழ்நீர், முடி போன்றவற்றைக் கொண்டும் கூட DNA பரிசோதனை செய்தால் கொலைக் குற்ற வழக்குகளில் எதிரிகளைக் கண்டுபிடித்துவிடலாம் என்றால் சரிதான். 2 வது எதிரியிடம் இருந்து DNA பரிசோதனைக்கு நான் முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் கைப்பபற்றப்பட்ட சட்டையையும் DNA பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே சட்டை வழக்கிற்காக உற்பத்திசெய்யப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. 02.08.2015 ம் தேதியில் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் வரிசை எண்.2,3,4,6 ஆகியவற்றையும் DNA பரிசோதனைக்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். DNA பரிசோனையின் மூலம் எதிரியைக் கண்டுபிடிக்கமுடியும் என்ற நிலையில் யாரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக DNA பகுப்பாய்விற்கு நான் அனுப்பவில்லை என்றால் யாரையும் காப்பாற்ற அவசியம் இல்லை. 02.08.2015 அத்தாட்சியில் கைப்பற்றியதாக சொல்லப்பட்டுள்ள நகை, பணம் எதுவும் 1 வது எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். 02.08.2015 அத்தாட்சியில் கைப்பற்றியதாக சொல்லப்பட்டுள்ள நகைகள் அனைத்தையும் காவல்நிலையத்தில் நான் வைத்திருந்ததாகவும் , நான் காவல்நிலைய்ததில் வைத்திருந்த நகைகளை 01.08.2015 அன்று புகார்தாரர் வெங்கடேசன் காவல்நிலையத்தில் வைத்து பார்த்துள்ளார் என்றால் சரியல்ல. 01.08.2015 அன்று எங்கள் காவல்நிலையத்தில் எனது பொறுப்பில் வைத்திருந்த வழக்கின் நகைகளை 02.08.2015 அன்று எதிரி விஸ்வநாதனிடம் இருந்து கைப்பற்றியதாக வழக்கிற்காக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல.

புகார் கொடுக்க வந்த அசா1 ஐ எத்தனை மணிக்கு விசாரணை செய்து பிரிவு 161(3) குவிமுச வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சுமார் 11.45 மணி முதல் 12.00 மணிக்குள் இருக்கலாம். புகார்தாரர் வெங்கடேசன், புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ, “இறந்த கௌரி தனது கணவரிடம் வழக்கின் எதிரிகள் வீட்டிற்கு வந்து ஹாலில் உட்கார்ந்து கொள்கிறார்கள் என்றும் என்னால் ரெஸ்ட் எடுக்க முடியவில்லை என்றும் டாய்லெட் கூட போகமுடியவில்லை என்றும் "சொன்னதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அதுபோல, சம்பவத்திற்கு 7,8 நாட்களுக்கு முன்னர் எதிரியும் அவரது நண்பரும் புகார்தாரர் வீட்டிற்கு வந்த விபரத்தை அசா1 தனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல், புகார்தாரர் " என் மனைவி இறப்பதற்கு 3 நாட்களுக்கு முன்னர் என் அம்மாவிடம் போனில் எதிரிகள் குறித்து இறந்த கௌரி புகார் சொல்லியுள்ளார்" என்று புகாரிலும், போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆடிவெள்ளி என்பதால் தான் நானும் என் மனைவியும் கோவிலுக்குப் போய்விட்டு காலை 11.00 மணிக்குத்தான் வீட்டிற்கு வந்தோம் என்று அசா1 புகாரிலும், போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1 வெங்கடேசன், அசா4 சங்கீதாவிடம் help செய்யுங்கள் என்று கேட்டதாக அசா1 புகாரிலும், போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் புகாரில், தாலிசெயின், 2 மோதிரம், தெங்கட்டான் , 2 லெட்சுமி காசு, 2 குண்டு, ஒரு செல்போன் காணாமல் போயிருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அசா1 தனது குழந்தைகளை பைக்கில் தான் தான் கூட்டிச் செல்வார் என்றால் சரிதான். அதேபோல் குழந்தைகளை பள்ளியில் இருந்து கூட்டிவருவதும் அசா1 தான் என்றால் சரியல்ல. ஸ்கூல் வேனில் குழந்தைகள் வருவார்கள். பள்ளி செல்வதற்கு பைக்கிலும், பள்ளியிலிருந்து வீடு திரும்ப வேனிலும் வருவார்கள் என்று வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்ட பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பள்ளி வாகனத்தின் வேன் டிரைவர் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். வேன் என்பது இந்த

வழக்கின் கற்பனை வாகனம் என்றும் அதனால் தான் அந்த வேன் டிரைவர் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. அசா1 புகார் கொடுக்க வந்தபோது, அவரது கை, கால், உடைகள் ஆகியவற்றில் இரத்தமாக இருந்ததது என்றால் சரிதான். இரத்த உடையுடன் வந்த அசா1 ன் உடைகளில் இரத்தம் எவ்வாறு வந்தது என்று நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மனைவியை சிகிச்சையில் சேர்க்க தூக்கிச்செல்லும் போது ஏற்பட்டது என்றார். அந்த உடைகளை நான் இந்த வழக்கில் கைப்பற்றவில்லை. அசா1 வீட்டிற்கு வந்த எதிரிகளுக்கு, இறந்த கௌரி டீ போட்டுக் கொடுத்தார் என்றும் அந்த பாத்திரம், டம்ளர், அனைத்தும் சிங்க்கில் அப்படியே இருந்தது என்று அசா1 தனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அப்படி சிங்க்கில் இருந்த பாத்திரங்களை நான் வரைபடத்தில் காட்டவில்லை என்றும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். பாத்திரம், டம்பளர் போன்ற பொருட்களில் கைரேகை பதிய வாய்ப்புண்டு என்று சொன்னால் சரிதான். மேற்படி பொருட்களை நான் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பவில்லை என்றால் தனிவிரல் ரேகை நிபுணர் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தில் விரல் ரேகை தடயம் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டான பொருட்களை ஆய்வு செய்தபோது soft surface போன்ற பொருட்களில் மட்டுமே ரேகை பதிய வாய்ப்புள்ளது என்றும் எவ்விதமான கைரேகை பதிவுகளை பதிவு செய்ய வாய்ப்பில்லை என்று சொன்னதல் மேற்படி பொருட்களை கைப்பற்றவில்லை. டீக்குடித்த டம்பளரில் எச்சில் படிந்திருக்கும் என்றும் அதை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பியிருந்தால் யார் என்று தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் நான் டம்பரைக் கைப்பற்றி ஆய்விற்கு அனுப்பவில்லை. எதிரிகள் அசா1 ன் வீட்டிற்கு வரவில்லை என்றும் அதனால் தான் தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே இறந்த கௌரியை அசா1 தான் கொலை செய்தார் என்று இறந்த கௌரியின் அப்பா அசா9 கொடுத்த

புகாரினை நான் இந்த வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் எதுவும் பெறப்படவில்லை. முதலில் அசா9 புகார்தாரதாக இருந்து அளித்த புகாரின் அடிப்படையில் அசா1 ஐ போலிசார் கைது செய்து விசாரித்ததால் தான், தினகரன் மற்றும் அனைத்து செய்தி தாள்களிலும் மனைவியின் நடத்தையில் கணவன் சந்தேகப்பட்டு மனைவியைக் கொலைசெய்தார் என்று செய்தி வந்தது என்றால் வியூகத்திற்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது. உண்மையிலேயே இந்த கொலையைத் திட்டமிட்டு அரங்கேற்றியது கௌரியின் கணவர் அசா1 வெங்கடேசன் தான் என்றால் சரியல்ல. இந்த கொலைக்கான காரணம் கௌரியின் இயல்பான பழக்கவழக்கமும், அசா1 ன் சந்தேக குணமும் தான் என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவ சமயத்தில் கூடலூரைச் சேர்ந்த ஒரு பெண்ணிற்கும் அசா1 க்கும் கள்ளத் தொடர்பு இருந்தது என்றும் அது சம்பந்தமாக இறந்த கௌரிக்கும் அசா1 க்கும் அடிக்கடி சண்டை நடக்கும் என்றும் அந்த கள்ளத் தொடர்பு காரணமாக புகார்தாரர் வெங்கடேசனுக்கும் அந்த பெண்ணிற்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றும் அந்த குழந்தை பிறந்து 1 வாரம் கழித்து தான் கௌரியை புகார்தாரர் வெங்கடேசன் சண்டையிட்டு கொலைசெய்துள்ளார் என்றால் சரியல்ல. தற்போது அந்த பெண்ணை வெங்கடேசன் திருமணம் செய்து கொண்டு குடும்ப உறவில் இருந்து வருகிறார் என்றால் எனக்குத் தெரியாது. தான் செய்த கொலையை மறைப்பதற்காகத்தான் சம்பவ இடத்தில் இருந்த கௌரியின் உடலை அசா1 அப்புறப்படுத்தியுள்ளார் என்றும் தடயங்களை முற்றிலும் அழிக்கவேண்டும் என்ற குற்ற உணர்வோடு, கௌரியின் உடலை இரவு 09.00 மணி வரை அசா1 ம், அவரது நண்பர் அசா3 ம் அவர்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று அசா1 ன் மூத்த மகளையும், இளைய மகளையும் எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் அவர்கள் தாத்தா மற்றும் பாட்டியும் நிலையம் ஆஜரானவர்களை பெண் காவலர் உதவியுடன் விசாரணை செய்தேன். நான் முறையாக நான் சொன்னது போல் விசாரணை செய்திருந்தால் அது பற்றி பொது நாட்குறிப்பில் பதிவு செய்திருப்பேன்

என்றால் சரிதான். நீதிமன்றம் கேட்டும்போது அந்த பதிவேட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க நான் தயாராக உள்ளேன். மேற்படி சிறுமிகள் காவல்நிலையத்திற்கு வரவில்லை என்றும் நான் அவர்களை விசாரணை செய்யவில்லை என்றும் காவல்நிலையத்தில் ஆஜரான சிறுமிகளை பெண் காவலர் முன்பு விசாரணை செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சிறுமிகளை விசாரித்த நேரம் சரியாக எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு சுமார் 11.00 மணிக்கு மேல் இருக்கும். சிறுமிகள் இருவரும் மாலை நேரத்திலேயே அவர்கள் அத்தை வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள் என்றும் அதனால் நான் அன்றையதினம் சிறுமிகளை விசாரித்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. அசா2 சிறுமி, பிரிவு 164 வாக்மூலத்திலும் நீதிமன்றத்தில் முதல் விசாரணையிலும் போலிசார் சொல்லியவாறு நான் நீதிமன்றத்தில் சொன்னேன் என்று சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. புகார் கொடுக்க வந்த வெங்கடேசன் எவ்வளவு நேரம் காவல்நிலையத்தில் எனது கட்டுப்பாட்டில் இருந்தார் என்றால் சுமார் 1 மணி நேரம் இருந்தார். புகார் கொடுத்த பிறகு தொடர்ந்து இரவு முழுவதும் இருந்தார். இரவு முழுவதும் அவர் காவல்நிலையத்தில் இருந்ததால் குழந்தைகளை அசா1 சந்திக்க வாய்ப்பில்லை என்றால் என்னால் அதைப்பற்றி சொல்ல முடியாது.

(நேரமின்மை காரணமாக எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை